

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



சென்னை கம்பன் கழகத்தின் 'பொலிவுமிகு பொன்விழா 51 நிறைவு விழா'விற்கான அழைப்பிதழை, முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்கள் வழங்கினார். துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் உடன் இருந்தார்.


### கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, - சாலை விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூர் திருமதி சரிதா குடும்பத்திற்கு

# தி.மு.க. சார்பில் ரூ.10 லட்சம் நிதி!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக.3-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூர் திருமதி சரிதா குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூபாய் 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**




மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில் கடந்த 2.6.2025 அன்று கழக உறுப்பினரான திருமதி சரிதா அவர்கள், தனது சொந்த ஊரான இறையனூர் கிராமத்தில் செல்வதற்கு திண்டிவனத்தை கடந்து சென்றபோது, செயின்ட் ஜோசப் பள்ளி எதிரே உள்ள சர்வீஸ் சாலை பக்கத்தில் இருசக்கர வாகனம் மோதி, பின் மண்டையில் பலத்த அடிபட்டு, ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அவரது குடும்ப நிவாரண நிதியாக, ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையினை, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், திருமதி சரிதா அவர்களின் கணவர் எஸ்.கண்ணன் அவர்களிடம் நேற்று (02.08.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

### "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

# ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது 'திராவிட மாடல்' அரசு!

### 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத் தொடக்கத்தையொட்டி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, ஆக.3-**

**'நலம் காக்கும் ஸ்டாலின்' கழக அரசின் திட்டத்தை முதல்வர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்ததையொட்டி வலைதளத்தில் பதிவிட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் திராவிட மாடல் அரசு அக்கறை கொண்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.**



அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

வளர்ந்து வரும் நாடுகளுக்குச் சவாலாக இருக்கும் தொற்றா நோய்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை இன்று முதல் தொடங்குகிறது திராவிட மாடல் அரசு.

சென்னை மயிலாப்பூர் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவப் பரிசோதனை முகாமை நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்வில் நாம் பங்கேற்றோம்.

விளிம்புநிலை மக்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு மாநகராட்சி, ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப் படவுள்ளது.

முன்கூட்டியே பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் நோய்களில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும் என்கிற அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் 1,256 பரிசோதனை முகாம்கள் நடைபெறவுள்ளன.

வாட்ஸ் அப் மூலம் அன்று மாலையே பரிசோதனை முடிவுகளும் தெரிவிக்கப்படும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்தின் நலத்திலும் அக்கறை கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு.

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறுகிற இந்த முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள என் அன்பும், வாழ்த்தும்!

இவ்வாறு அப்பதிவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கிராமப்புற மக்களுக்கு சிறந்த மருத்துவச் சேவையை உறுதி செய்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த முகாமின் சிறப்பம்சம் என்று நான் சொல்வது, உங்கள் 'டெஸ்ட் ரிப்போர்ட்' அனைத்தையும் மொத்தமாக 'ஃபைல்' செய்து உங்களிடம் வழங்கிவிடுவோம். இந்த ரிப்போர்ட், உங்களுடைய 'மெடிக்கல் ஹிஸ்டரி' போன்றது! எதிர்காலத்தில், நீங்கள் எந்த ட்ரீட்மெண்ட்டிற்குச் சென்றாலும், எந்த ஹாஸ்பிட்டலுக்குச் சென்றாலும், இந்த ரிப்போர்ட் உங்களுக்குப் பயன்படும்!

இந்த முகாம்கள் மூலமாக, இதில் பயனடைகின்ற எல்லோருடைய நலனும் பாதுகாக்கப்படும் என்ற உறுதியை நான் அளிக்கின்றேன்.

**ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவச் சேவையை உறுதி செய்வோம்!**

நம்முடைய அரசின் குறிக்கோள், நகர்ப்புறத்தில், நன்றாகப் படித்து, வசதியானவர்களுக்குக் கிடைக்கின்ற மருத்துவச் சேவை, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழை எளிய பாமர மக்களுக்கும் கிடைக்கவேண்டும். அதை உறுதி செய்வோம்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், மருத்துவ உள்கட்டமைப்பு வசதி கிராமப்புறங்கள் வரை பரவலாகிவிட்டது. மருத்துவமனைகளை நோக்கி வர முடியாதவர்களுக்கும் மருத்துவச் சேவைகளைக் கொண்டு போகவேண்டும் என்பதற்காகத் தான் இதுபோன்ற முகாம்களை நாம் நடத்துகின்றோம். இதை மக்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.8.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, முகாமில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். அப்படி நம்முடைய உடல்நலம் நன்றாக இருந்தால்தான் நம்மால் மகிழ்ச்சியாக வாழமுடியும் – உழைக்க முடியும் – சாதிக்க முடியும்.

**'நோயாளிகள்' அல்ல! 'மருத்துவப் பயனாளிகள்'**

மருத்துவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், சில நாட்களுக்கு முன்னால், நம்முடைய மானமிகு திராவிட இயக்கத்தின் ஆசிரியர் அய்யா அவர்கள், எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில், "மருத்துவமனைக்கு வருகின்றவர்களை நோயாளிகள் என்று அழைக்கக் கூடாது" என்று குறிப்பிட்டிருந்தார். அதுவும் சரிதான்! ஏனென்றால், எல்லோருக்கும் உடலில் ஏதாவது ஒரு சிறிய பிரச்சினை இருக்கும்; அதற்காக அவர்களை நோயாளி என்று சொல்லக்கூடாது!

மருத்துவர்களையும் மருத்துவமனைகளையும் நாடி வருகின்றவர்களை "மருத்துவப் பயனாளிகளாக" நாம் பார்க்க வேண்டும்! இந்த முகாம்களுக்கு வருகின்ற மக்களையும், மருத்துவப் பயனாளிகளாகத் தான் நீங்கள் பார்க்க வேண்டும்!

அடுத்து, மருத்துவப் பணியாளர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, உங்கள் குடும்பங்களில் ஒருவர் வந்தால் எப்படி கவனித்துக் கொள்வீர்களோ, அதேபோல, இந்த முகாம்களுக்கு வருகின்றவர்களையும் அக்கறையுடன் பரிவுடன் நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்!

அதேபோல, மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வது, இந்த முகாம்கள் உங்கள் பகுதிகளில் என்றைக்கு நடைபெறுகிறது? என்னென்ன சேவைகள் வழங்கப்படுகிறது என்று நீங்கள்தான் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்! அவர்கள் பயன்பெற அத்தனை உதவிகளையும் நீங்கள் செய்யவேண்டும்!

**எதிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்க வேண்டும்!**

நீங்கள் ஏற்படுத்துகின்ற விழிப்புணர்வால், ஒருவருடைய உயிர் காப்பாற்றப்படலாம். ஒரு குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படலாம். எனவே, இதில் உங்களுடைய பங்களிப்பும் மிகவும் அவசியம்!

எதிலும், எப்போதும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்கவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்! அப்படி, மருத்துவச் சேவைகள் வழங்குவதிலும், மக்களுடைய உடல்நலனைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்கவேண்டும்! இதுபோன்ற திட்டங்களால் அது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் நலமான உங்களுடைய வாழ்வுக்கு வாழ்த்துகளைச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.